**Starting time 12.15 P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 117/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 15.03.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** வழக்கு சொத்தின் விவரம் என்ன என்றால், புல எண். 334/3-ல் 1 ஏக்கர் எனது அனுபவித்தில் இருக்கிறது. அந்த சொத்து ஆத்தூர் டு கடம்பூர் செல்லும் 334/2-ல் கிழமேலாக புல எண். 334/7 அரசு தரிசு புறம்போக்கின் வழியாக செல்லும் வண்டிப்பாதை 15 அடி அகலத்தில் உள்ளது. தாவா சொத்து விவரத்தில் வாதிகளின் நிலத்தின் புல எண் சொல்லப்பட்டுள்ளதா என்றால், சொல்லியுள்ளேன்.

2. என்ன புல எண் சொல்லியுள்ளேன் என்றால், சாட்சி வழக்குரையை படித்துப் பார்த்துவிட்டு என்னுடைய வழக்குரையில் என்னுடைய சொத்தின் புல எண் சொல்லியுள்ளேன். தாவா சொத்து விவரத்தில் புல எண் சொல்லியுள்ளேனா என்றால், சாட்சி பதில் சொல்ல மறுக்கிறார். எங்களுக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொத்து பாத்தியப்பட்டது என்று என்னுடைய வழக்குரையிலோ, சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால், சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு

சொல்லவில்லை என்றால், சொல்லியுள்ளேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா பாதை பாத்தியப்பட்டது என்றால், என்னுடைய உரிமை ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது. வா.சா.ஆ.2-ன் படி பாத்தியப்பட்டது.

3. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால், படித்துப் பார்த்தேன். அதில் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். சுவாதீன ஒப்படைப்பு பத்திரத்தை நாங்கள் எழுதிக் கொடுக்கவில்லை என்று பிரதிவாதிகள் தங்களுடைய பதிலுரையில் சொல்லியுள்ளார்கள் என்றால், ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணம் மோசடியாக என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொல்லியுள்ளார்களா என்றால், அவர்களே கையெழுத்து போட்டுவிட்டு தற்போது இல்லை என்று கூறுகிறார்கள்.

4. என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் தடபாத்திய ஒப்பந்த பத்திரம் யாரால் எந்த சூழ்நிலையால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று நான் கூறியுள்ளேன் என்றால், 05.06.2002 தேதியன்று எழுதப்பட்டதாக கூறியுள்ளேன். எந்த சூழ்நிலையில் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், பஞ்சாயத்து பேசும் போது எழுதிக் கொடுத்தாக கூறியுள்ளேன்.

5. வா.சா.ஆ.2 ஆவணத்தை பிரதிவாதிகள் எழுதிக் கொடுக்கவில்லை என்று கூறும் நிலையில் அந்த ஆவணத்தை நிரூபிக்கும் கடமை என்னை சேர்ந்தது என்றால், அவர்கள் அதில் கை ரேகையும் கையெழுத்தும் வைத்துள்ளார்கள். ஆய்வகத்திற்கு அனுப்பி அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும். வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யப்படாதது என்றால், ஆமாம். வழக்கை யார் யார் தாக்கல் செய்துள்ளோம் என்றால், நானும் எனது பெற்றோர்களும் தாக்கல் செய்துள்ளோம்.

6. வா.சா.ஆ-2 ஆவணத்தை யார் யார் எழுதியுள்ளார்கள் என்றால், எனது பெற்றோர்கள் சிவபாக்கியம் மற்றும் சின்னசாமி உடையார். ஆனால் வழக்கில் என் தாயார்

சிவப்பாயி என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால், வீட்டில் அவ்வாறுதான் கூப்பிடுவார்கள். சிவப்பாயி (எ) சிவப்பாக்கியம்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 12.32 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.